

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.9.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ”ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் மற்றும் பொதுச்செயலாளர் விஸ்வைகுமார் அமைப்புச் செயலாளர் திலீபன் மாநில ஆலோசகர் விடுதலைகுமார் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதித்தமிழர் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத் தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு ஆதித்தமிழர் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

## செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை செப்13–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காக வும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் ” இப்படை தோற்கின் எப்படை வெல்லும் ” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் ” மெட்ராஸ் ஸ்டேட் ” என்ற பெயரை ” தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளான 15.9.2026 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ) தலைமையிலும், முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம் ஆகியோர் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.



அது சமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

## தமிழறிஞர் சாலமன் பாப்பையா மறைவு!

# பட்டிமன்றத் தமிழ் முடிந்து விட்டதா?



சாலமன் பாப்பையாவின் மறைவு
உள்ளத்தை உடைக்கிறது

பாரதி மறைந்தநாளில்
பாப்பையாவும்
மறைந்திருக்கிறார்

செப்டம்பர் 11
தமிழுக்கு நல்லநாள்
இல்லை போலும்

பட்டிமன்றத் தமிழ்
முடிந்துவிட்டதா?
பாமரத் தமிழ்
மூச்சை
நிறுத்திக்கொண்டதா?
கல்லூரிகளில்
பயிற்றுவித்த தமிழைக்

கடைவீதிக்குக்
கொண்டுசேர்த்தவர்
சாலமன் பாப்பையா

இந்தக் குளத்தில்
கல்லெறிந்தவர்கள் நூலில்
அவர்குறித்தும் எழுதியிருக்கிறேன்

சிரிக்க வைத்துச்
சிந்திக்கவும் வைத்த
மேடைக் கலைவாணர்
மறைந்துவிட்டார்

அவரது நாற்காலி
காலியாகவே இருக்கும்;
நிரப்ப முடியாது

மதுரைக்கே
ஒரு வெறுமை வந்துவிட்டது;
மனம் கலங்குகிறது

அவரை இழந்து வாடும்
குடும்பத்தார்க்கும்
உலகத் தமிழர்களுக்கும்
ஆழ்ந்த இரங்கல்

கவிப்பேரரசு
வைரமுத்து



## திருவிடைமருதூரில் கழக முப்பெரும் விழா –

# முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி பிறந்தநாள் விழா சிறப்பு பட்டிமன்றம்!

### முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தஞ்சாவூர் செப்.13-

தஞ்சை வடக்கு மாவட்டம் திருவிடைமருதூரில் கழக முப்பெவிழா மற்றும் சோழமண்டல காவலர் ஆற்றல்மிகு கோசி.மணி அவர்களின் பிறந்தநாள் பட்டிமன்றம் இன்று மாலை ஆடுதுறையில் நடைபெற உள்ளது.



கழக முப்பெரும் விழா மற்றும் முன்னாள் அமைச்சர் ஆற்றல்மிகு கோசி மணி அவர்களின் பிறந்த நாள் விழாவை கொண்டாடும் வகையில் இன்று 13.09.2026 மாலை 6.00 மணிளவில் ஆடுதுறை, சங்கடி மேடையில் திமுகவின் 75 ஆண்டு சாதனையில் உச்சம் தொட்டது அரசியல் பணியா சமுதாய பணியா என்ற தலைப்பில் மாபெரும் பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் தலைமை வகிக்கிறார், ஒன்றியக் கழகச் செயலாளர் சுந்தர.ஜெயபால் வரவேற்புரை ஆற்றுகிறார், கழக சட்டத்திட்ட திருத்த குழு தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வைக்கிறார்கள்,

முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சரும், திமுக சட்டமன்ற துணை கொரடாவுமான கோவி.செழியன் எம்.எல்.ஏ நடுவராக செயல்பட, அரசியல் பணியே என்ற தலைப்பில் தூத்துக்குடி சரத் பாலா, ஆடுதுறை ம.உத்ராபதி, ரகுநாத் ஆகியோரும், சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சைதை சாதிக், ஸ்ரீலேகா பாஸ்கர், ரா.செ.கபில் சாய் ஆகியோரும் உரையாற்றுகிறார்கள்

இந்நிகழ்வில் கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப. தமிழழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தட்சிணாமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது, தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி, ஒன்றிய கழகச் செயலாளர்கள்கோ.க.அண்ணாதுரை, சி.அம்பிகாபதி, மிசா என்.மனோகரன், சா.சரவணன், உதயா ரவிச்சந்திரன், உள்ளூர் டி. கணேசன் எஸ்.கே.முத்து செல்வம், ஜெ.சுதாகர், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.கலியமூர்த்தி, இரா.அசோக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுபா திருநாவுக்கரசு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் துரை.இரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள் ஆடுதுறை பேரூர் கழகச் செயலாளர் கோசி.இளங்கோவன் நன்றியுரை ஆற்றுகிறார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள். மாநிலக் கழக நிர்வாகிகள். பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள். பேரூராட்சி மன்ற தலைவர்கள் மாவட்ட சார்பு அணியின் நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள், ஆடுதுறை பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சித் துறைகளின் முன்னாள் இன்னாள் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாக கலந்து கொள்ள நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் முன்னாள் அமைச்சருமான கோவி. செழியன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அனைத்து தரப்பு மக்களுக்கு எதிராக தனியாருக்கு ஆதரவாக செயல்படும்

# த.வெ.க. ஆட்சி விரைவில் தூக்கி எறியப்படும்!

### சேலம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் பேச்சு!

சேலம்.செப்.13-

தொழிலாளர்கள், தூய்மை பணியாளர்கள், விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் எதிராகவும் தனியாருக்கு ஆதரவாகவும் செயல்படும் இந்த தவெக ஆட்சி விரைவில் தூக்கி எறியப்படும் என்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்தார்





போக்குவரத்து கழகத்தை தனியார் மயமாக்கும் தவெக அரசின் நடவடிக்கையை கண்டித்தும், வட மாநில தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் வாயில் கூட்டம் சேலம் ராமகிருஷ்ணா சாலையில் உள்ள சேலம் மண்டல போக்குவரத்து கழக தலைமை அலுவலகம் முன்பு நடைபெற்றது.

போக்குவரத்து தொமுச மண்டல தலைவர் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சரும் தொமுச சிறப்பு தலைவருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக தொழிலாளர்களை பாதிக்கும் நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளை ரத்து செய்திட வேண்டும் தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்களை அமல்படுத்திட வேண்டும் என்று ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தியும், போக்குவரத்து கழகத்தை தனியாருக்கு விற்கும் முயற்சியில் ஈடுபடும் தவெக அரசை கண்டித்தும்,அரசு பேருந்துகளின் இயக்கத்தை குறைத்து தனியாருக்கு ஆதரவாக செயல்படும் போக்கினை கண்டித்தும் ஒப்பந்த தொழிலாளர்களை வட மாநிலங்களில் இருந்து பணியில் அமர்த்துவதை நிறுத்திட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முழக்கங்களாக எழுப்பி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் தமிழகத்தில் போக்குவரத்து துறையை உருவாக்கியது திமுக என்றும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கியது கலைஞர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் மு க ஸ்டாலின் என்று பெருமிதத்தோடு கூறிய அவர் தற்போது உள்ள அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் எதிரான அரசாக செயல்பட்டு வருவதாகவும் போக்குவரத்துத் துறை மட்டுமல்லாமல் அனைத்து துறைகளையும் தனியாருக்கு முக்கியத்துவம் அளித்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் போக்குவரத்து தொழிலாளர்கள் தூய்மை பணியாளர்கள் விவசாயிகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் விரோதமான ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும் இந்த ஆட்சி மக்களின் ஆதரவோடு விரைவில் தூக்கி எறியப்படும் என்று தெரிவித்த அவர் மக்கள் விரோத இந்த ஆட்சி தூக்கி எறியப்படும் நாளே தமிழக மக்களின் பொற்காலம் என்று தெரிவித்தார்.

## தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் பேர்கள் பங்கேற்றனர்:

# த.வெ.க. அரசைக் கண்டித்து மின் கழக தொ.மு.ச.வினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை, செப்.13-

தொழிலாளர்களின் விரோத த.வெ.க. அரசை கண்டித்து தமிழ்நாடு மின் கழகத் தொமுச சார்பாக தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதுமுள்ள மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு மற்றும் மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு மின்கழகத் தொமுசவினர், மின்வாரி யம் தனியார்மயமாவதை கைவிட வலியுறுத்தியும், ஒப்பந்தத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணி நிரந்தரம் , விடுபட்ட கேங்மேன் பணிநிரந்தரம் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 11.09.2026 மாலை 5.20 மணியளவில் தவெக அரசை எதிர்த்து மாநிலம் முழுவதும் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

சென்னையில் மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தலைமையில் 11.09.2026 மாலை 5.20 மணியளவில், தொமுச பேரவைச் செயலாளர் தனசேகரன் முன்னிலையில் சென்னை, அனைத்துத் திட்டச்சங்க நிர்வாகிகள் / உறுப்பினர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் என 1000 பேர்கள் எழுச்சியுடன் கலந்துக் கொண்டனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் பேசும்போது, திராவிட மாடல், கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்களின் அரசு தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும் அரசாக இருந்தது. மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல சலுகைகள் பெற்றுத்தந்தது.

2021-2026 ஐந்து ஆண்டுகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க 2 ஊதிய உயர்வுகளை மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கியது. பணிபுரிகிறவர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், பாதுகாப்பை உறுதிசெய்தும், பெற்று வந்த சலுகைகளை பாதிக்காத வண்ணம் 13 ஆண்டுகள் கிடப்பில் இருந்த முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அதிமுக ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிய விடுப்பை காசாக்கிக்கொள்ள அனுமதி அளித்தார்கள். உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் தீபாவளி போனஸ், பொங்கல் பரிசு உள்ளிட்ட பல சலுகைகளை வழங்கி மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார்கள்.

புதியதாக பொறுப்பேற்ற இந்த தவெக அரசு 10,000 தொழிலாளர்கள் 5 ஆண்டுகளுக்கு தற்காலிகமாக பணியில் எடுக்க உத்தரவு வழங்கி, தற்போது மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை வஞ்சிப்பது நியாயம் ஆகாது. பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உடனே பணி வழங்க வேண்டும்.

பணியாளர்களின் பற்றாக்குறையால், கூடுதலாக பணிச்சுமையில் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புள்ளாகியிருக்கும் தொழிலாளர்களின் பணிச்சுமையை குறைக்க காலிப்பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்.

அதே போல கேங்மேன் தொழிலாளர்களுக்கு களப்பணி உதவியாளராக பதவிமாற்றம் வழங்கிட வேண்டும், விடுப்பட்ட கேங்மேன் தொழிலாளர்களுக்கு பணி வழங்க வேண்டும் என பல கோரிக்கைகள் வலியுறுத்தி தவெக அரசை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினார்கள்.

தவெக அரசின் தொழிலாளர் எதிர்ப்பு நிலையை தொடர்ந்தால் மாநில முழுவதும் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்று கூறினார்.



சுதந்திர போராட்ட வீரர், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் 69 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில் கலைஞர் அறிவாலயத்தில், அவரது திருஉருவ படத்திற்கு, மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ வழிகாட்டுதலின் பேரில், மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட கழக அவைத்தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். எம்.எல்.ஏ.க்கள் பிஆர். இளங்கோ, சூரியனூர் சந்திரன் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.